# கிடை புதினத்தில் நிலவியல் பண்பாடு

***முனைவர் போ. மணிவண்ணன்***
தமிழ்த் துறைத் தலைவர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
அவிநாசி
https://doi.org/10.5281/zenodo.14383375

***ஆய்வுச் சுருக்கம்***

*நிலவியல் பண்பாடு என்பது ஒரு நிலத்தின் முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளில் எடுத்துக் கொள்ளும் இடம் என்று கருதலாம். அது வாழ்வியலில் மட்டுமின்றி இலக்கியத்திலும் எதிரொலிக்கும். எழுத்தாளர் கி.ரா. அவர்களின் படைப்புகளின் பின்னணி பெரும்பாலும் நிலவியல் பண்பாடு சார்ந்ததாகும். கிடை எனும் ஆடு மேய்க்கும் தொழிலின் நிறை குறைகள் அதன் வம்பாடுகளுடன் கிடை நாவலில் விவரிக்கப்படுகின்றன. முல்லை நிலமாகிய மேய்ச்சல் நிலப் பண்பாடும் மருத நிலமாகிய உழவுப்பண்பாடும் ஒன்றையொன்று சார்ந்தும் பகைத்தும் வாழும் முறைகளை எடுத்துரைப்பது அந்நூலின் தனித்தன்மையாகும்.*

*திறவுச் சொற்கள்: கிடை, கிடை மறித்தல், கீதாரி, ஆச்சிக்குட்டி, தருமப்பால், கிடைப் பிச்சைக்காரர்கள், உப்புக்கண்டம், குறிகேட்டல், முள்வாங்கி, தொரட்டி*

**கி.ராஜநாராயணன்**

*இடைசெவல் கிராமத்தில் ஸ்ரீ கிருஷ்ண ராமானுஜம் - லட்சுமி அம்மாள் தம்பதியரின் ஐந்தாவது குழந்தையாகப் பிறந்தார் கரிசல் இலக்கியத்தின் தந்தை எனப் போற்றப்படும் கி.ரா. அவர்கள்.இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் ஸ்ரீகிருஷ்ண ராஜநாராயண பெருமாள் ராமானுஜம் நாயக்கர் என்பதாகும்.*

*கி.ரா.வின் முன்னோர்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் தெலுங்கு தேசத்திலிருந்து வந்து இங்கே குடியேறியவர்கள் ஆவார்கள். கி.ரா. எட்டாம் வகுப்புடன் பள்ளிக் கல்வியைக் கைவிட்டாலும் வாழ்வு தரும் பட்டறிவினைப் படிக்க மறக்கவில்லை. பிறந்த மண்ணும் வாழ்ந்த வாழ்வும் அவரை எழுதத்தூண்டின. தன்னைச் சுற்றி நடப்பவற்றிலுள்ள கதைகளை அவரது படைப்பு மனம் பிரித்தறியத் தலைப்பட்டது. அவரதுகுடும்பத்தில்தந்தையிடமிருந்துகேட்ட ஏராளமான கதைகள் அல்லது வாழ்வியல் அனுபவங்கள் அவரின் கதைகளுக்கு அடித்தளமிட்டன. கரிசலின் மொழியையும் கிராமிய எழிலையும் தொட்டு எழுதிய அவரது எழுத்துக்கள் மக்கள் மனதில் ஒட்டிக் கொண்டன. பாமரமக்களின் பேச்சு வழக்கையும் சொலவடைகளையும் பொருத்தமாகக் கையாண்டு தனிமுத்திரையை எழுத்துலகில் பதித்தார். இவரது முதல் நாவல் ‘‘கோபல்ல கிராமம்’ பெரும் வரவேற்பை வட்டார வழக்கு நாவல்களில் பெற்றது. தொடர்ந்து நாடோடி இலக்கியம், சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் என்று முப்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளன. கி.ரா. வின் வட்டார வழக்குச் சொல்லகராதி தமிழ் மொழியின் ஆவணத் தொகுப்புஆகும். ‘‘கதைசொல்லி’ என்ற இதழையும் நடத்தி வந்தார். பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் நாட்டுப்புறவியல் துறையின் இயக்குநராகப் பணிபுரிந்துள்ளார். சாகித்ய அகாதெமி விருது உட்பட பல பரிசுகளை இவரது படைப்புகள் வென்றுள்ளன.*

**ஆயர்குடி**

காடும் காடு சார்ந்த பகுதியை ''முல்லைநிலம்' என அழைத்தனர்.. முல்லைநில மக்களின் முதன்மைத் தொழில் ''ஆநிரை மேய்த்தல்'' ஆகும். மேட்டுப்பாங்கான நிலப்பகுதி மேய்ச்சல் நிலப்பரப்பாக பயன்பட்டுள்ளது. முல்லைத் திணை மக்கள் ' இடையர்கள்' எனப்பட்டனர். முல்லை நிலத்தில் வாழும் இவ்வினக் குழுவினர் ஐயர், இடையர், கோவலர், ஆய்ச்சியர், பொதுவர், அண்டர் போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டனர். இதனை,

**"ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப்பெயர்**
**ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே"**

**(தொல். அகத்திணை நூ.23)**

என்று சுட்டுகிறது தொல்காப்பியம். செவ்வியல் நூல்கள் எருமைகளை வளர்ப்பவர்களைக் 'கோட்டினத்தார்', எனவும் பசுவை வளர்ப்பவர்களைச் ' கோவினத்தார்', எனவும் ஆடுகளை வளர்ப்பவர்களை ' ஆட்டினத்தார்' எனவும் மூன்று வகையான ஆயர் இனக்குழுக்களை வரையறை செய்து காட்டுகின்றது.மேய்ச்சல் தொழிலும் வேளாண்மையும் இணைந்து மேற்கொள்ளும் தற்சார்பு பொருளாதாரத்தை இவர்கள் வளர்த்தெடுத்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது. இடையர்கள் எனப்படும் ஆயர்கள் நிலத்தோடும், கால்நடைகளோடும் பின்னிப் பிணைந்திருக்கும் வாழ்வியலை புலப்படுத்துவதோடு, ஆயர்குடியின் தனித்துவமும் பேசப்படுகிறது. ஆயர் குடியினராகிய முல்லைத்திணை மக்கள் தமக்குள் கொண்டிருந்த மரபுகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், விழுமியங்கள் குறித்துப் பரவலாக செவ்வியல் நூல்களில் அறிய இயலுகிறது.

**கிடை**

கிடை என்பது ஆடு, மாடுகளை இரவு நேரத்தில் வயல்போன்ற திறந்தவெளிகளில் தங்கவைக்கும் இடமாகும். ஆடுகளைக் கொண்டது ஆட்டுக்கிடை என்றும் மாடுகளைக் கொண்டது மாட்டுக் கிடை என்றும் அழைக்கப்படும்.இவ்வாறு கால்நடைகளை அழைத்துக் கொண்டு ஊர் ஊராகச் செல்வர். குறிப்பிட்ட காலம் வேளாண் நிலத்தில் பட்டி இட்டுத் தங்க வைப்பர். ஆடு மாடுகள் இரவு படுத்திருக்கும்போது சிறுநீர், சாணம் ஆகியவற்றை ஒரே வயலில் இடுவதால், அந்த வயலுக்கு நேரடியான இயற்கை உரம் கிடைக்கிறது. இதனால் அடுத்து வரும் விதைப்புக்கு நல்லுரம் கிடைத்து விடும். இந்த நடைமுறை காவிரிப் பாசன மாவட்டங்களில் இன்றும் நடைமுறையில் உள்ளது. குறிப்பிட்ட கட்டணத் தொகையைக் கிடை போட உழவர்களிடம் கிடைகாரர்கள் வசூலித்துக் கொள்வார்கள்.

கிடை போடுவது பெரும்பாலும் கோடைக்காலத்திலேயே நடக்கும். தங்களிடம் போதுமான மேய்ச்சல் நிலமில்லாதவர்கள் கிடைகார்களிடம் தங்களின் மாட்டை ஒப்படைத்து விதைப்புக் காலத்தில் மாடுகளைத் திரும்பப் பெற்றுக் கொள்வதும் உண்டு.

தமிழகத்தின் தட்ப வெப்பப் பருவச்சூழலைத் தாங்கும் நாட்டு மாடுகள் பெரும்பாலும் கிடையில்இருக்கும். நீண்ட காலமாக கன்று போடாத பசுமாடுகளை கிடைக்கு அனுப்பி வைப்பர். கிடையில் காளைகள் இருப்பதால் பசுக்கள் விரைவில் சினையுற்று கன்றுகளை ஈனும்.

இடையர்கள் தங்களது குலத்தொழிலான கிடை போடுதலை விட்டு விடாமல் பழக்க வழக்கங்களைப் பின்பற்றி மண்ணை நம்பிச் செய்து வந்த தொழில்களெல்லாம் இன்று நலிவடைந்து விட்டன. கால மாற்றத்தினாலும் நாகரிக வளர்ச்சியினாலும் மேய்ச்சல் நிலங்களின் பராமரிப்பு முறை மாறிப்போயிருக்கிறது. இயற்கையாகக் கிடைக்கும் மேய்ச்சல் இல்லாமல் போய்விட்டது. மருத நிலம் முற்றிலுமாக வறண்டு புல் பூண்டு இல்லாமல் கிடக்கிறது. நீர் வளத்தை கணிசமாகச் செலவு செய்து

*உருவாக்கிக்கொள்ளும் வசதியுள்ளவர்கள் மட்டுமே நிலங்களையும் கால்நடைகளையும் வைத்துக்கொள்ளமுடியுமென்ற நிலை உருவாகியிருக்கிறது. மழையின்றி மேய்ச்சல் நிலமுமின்றி ஆநிரை மேய்த்தல் தொழிலைத் தனிமனிதன் பேணும் போது அவனது வாழ்வும் வலியும் கனன்று கொண்டிருக்கிறது.*

*ஆயர்களைப் போலவே கீதாரிகளின் வாழ்வியல் சூழலும் இன்று மாறியுள்ளது. இவர்களது வாழ்க்கை அரைவாசி நாடோடித்தனமான வாழ்க்கை என்றாலும் மிக இறுக்கமானது. மண் வளத்திற்கான மரபார்ந்த இயற்கை உரம் உருவாக்கும் 'கிடை அமர்த்தல்சுஎன்னும் தொழில் புரிவதற்காக மேட்டாங்காடுகளில் ஆடுகளையும் மாடுகளையும் இழுத்துக்கொண்டு நிலம் நிலமாக நடந்தும் கடந்தும் திரியும் இவர்களது வாழ்க்கை மனிதன் கையாண்ட ஆதித் தொழிலாகும்.*

## கீ. ரா. வின் கிடை புதினம்

*கி.ராவின் மிகச்சிறந்த படைப்பான கிடை என்னும் குறு நாவல் இடையர் இனத்திற்கிடையே உள்ள சமூக உறவுகளையும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும் நுட்பமாகப் படம்பிடித்துகாட்டுகிறது. இப்புதினத்தின் அடிப்படைக் கூறாக மேய்ச்சல் நிலப் பின்னணியில் இயங்குகின்ற பண்பாட்டு நிலவியல் பேசப்படுகின்றது.*

*கிடை எழுப்பும் சத்தம் முதற்கொண்டு கிடைகள் முறையே குரா, சுணக்கி, குருட்டாடு, சொட்டை காது, ஓங்கோல்,புளியம்போர் என்றெல்லாம் பிரித்து எட்டு திசைகளுக்கும் கிளம்பும் கிடை ஆடுகளின் பாங்குகள் பற்றி நுட்பமான அவதானிப்பைப் பதிவுசெய்திருக்கும் இப்புதினத்திற்கு கி.ராவின் படைப்புகளில் தனி இடம் உண்டு. அறுபது பக்கங்களில் எழுதப்பட்ட இந்நாவல் ஆயர் வாழ்வியலின் நிலவியல் பண்பாட்டினை மிக ஆழமாக குறுக்குவெட்டுத் தோற்றத்தில் நம்முன் காட்சிப்படுத்துகிறது.*

## கீதாரி

*தமிழ்ப் பேரகராதி, (தொகுதி ஐஐ, ப.948) 'கீதாரி' என்ற சொல்லை 'இடையர் தலைவன்' என்று பொருள் உரைக்கின்றது. ஆட்டுக் கிடைகளுக்கு அதிகாரியாக, தலைவராக இருப்பவரை 'கீதாரி' என்று அழைக்கிறார்கள். இச்சொல் 'கீத்து' என்னும் சொல்லின் அடிப்படையில் பிறந்ததாகும். 'கீத்து' என்னும் சொல்லுக்கு 'ஈனுதல்' என்பது பொருளாகும் (தமிழ்ப் பேரகராதி, (தொகுதி ஐஐ, ப.769).*

*கீதாரி என்பவர் நான்கில் இருந்து ஆறு வரையிலான ஆடு மேய்க்கும் குடும்பத்திற்குத் தலைவர் ஆவார். ஆடுகளை மேய்ச்சலுக்கு ஒட்டவேண்டிய திசை, ஊர் ஆகியவற்றை முடிவு செய்து, ஆட்டிடையர்களை ஒருங்கிணைப்பார். வேளாண் நில உரிமையாளரிடம் கூலி பேசிபெற்றுத்தருவதும், இவரது பணியாகும். ஆடு மேய்ப்பதில் எழும் சிக்கல்களை இவரே எதிர்கொள்கிறார்.*

*ஊரிலே போடப்பட்டிருக்கும் கிடை, கிடையின் கீதாரி(தலைவர்), கிடையின் அமைப்பு, சட்டத்திட்டங்கள், கிடை கீதாரியின் பணிகள், கிடையில் யார் யாருக்கு எந்த இடம் ஒதுக்கப்பட்டிருக்கும், மேய்ச்சலுக்காக ஆடுகளை பாங்கு பிரித்தல் என்று அவ்வளவு நேர்த்தியாக ஒவ்வொரு செய்திகளையும் விவரிக்கிறார்*

*கிடை என்பது ஒரு தனி ராஜ்யம் அதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவன் உண்டு. அந்த தலைமை ஸ்தானாதிபதியின் பெயர்தான் 'கீதாரி' என்பது. கிடைக்கு என்று ஏற்பட்ட பூர்வீக வழிவந்த சில சட்ட திட்டங்கள் உண்டு. அதை யாருமே கொஞ்சம் கூட மீறக்கூடாது. ஆட்டுக்குட்டிகளின் கூடுகளை வரிசைப்படுத்தி வைப்பதற்குக்கூட ஒரு முறை உண்டு. அதற்கு 'வட்டம்'*

*என்று பெயர். நிலச் சொந்தக்காரர்கள் கொடுக்கும் கிடைக்கூலியான தானியத்தைக் கிடைக்காரர்கள் இந்த வரிசைமுறைப்படிதான் வாங்கிக்கொள்ள வேண்டும்.*

*கிடைக்காரர்களுக்கு என்று ஒரு தனிச் சொற்கள் போட்டுப் பேசப்படும் 'மொழி' யே உண்டு. ஈடுபட்டவர்களுக்குத்தான் அது புரியும். கிடையிலிருந்து மேய்ச்சலுக்கு எழுப்பி. ஒரு ஒதுக்கி நிறுத்துவதைத்தான் 'பாங்கு' என்று சொல்லுவார்கள்*

*செம்மறி ஆடுகளைச் சாதாரணமாக வெளியார்கள் யாரும் பார்க்கும்போது, பார்ப்பதற்கு ஒன்று போலத்தான் தெரியும். ஆனால், அவைகளின் கணக்கற்ற நிறமாற்றங்களுக்குத் தகுந்தபடி கிடையில் ஒவ்வொரு ஆட்டுக்கும் என்று ஒவ்வொரு நிறப்பெயர் உண்டு. அதன் உடம்பில் ஏதாவது ஒரு வச்சம் ஏற்பட்டுவிட்டால், அந்த வச்சமே அதனுடைய பெயராகிவிடுவதும் உண்டு. நிறப்பெயரைச் சொன்னாலே போதும்; அது இன்ன துண்டத்தைச் சேர்ந்த ஆடு, இன்னாருடையது அது என்று சொல்லிவிடுவார்கள்.*

**கிடைமறித்தல்**

*எண்ணிக்கை சரிபார்க்கப்பட்டு ஆடுகள் கிடையிலிருந்து மேய்ச்சலுக்குக் கிளம்பும் போது ஒரு பெண் தலைவிரிகோலமாக ஓடிவந்து கிடையை மறிக்கிறாள். அப்போது கிராம வழக்கில் உள்ள ஒரு நீதிமுறையான 'கிடை மறித்தல்சு என்ற ஒன்றை கி.ரா அவர்கள் புதுத் தகவலாகப் பதிவு செய்கிறார். கிடை மறித்தல் என்றால் எவருடைய புஞ்சை நிலத்திலாவது ஆடுகள் புகுந்து நாசம் செய்து விட்டது என்றால் கிடையை மேய்ச்சலுக்கு ஓட்டிச்செல்லவிடாமல் மறித்து கீதாரியிடம் முறையிடுவர் . அப்படிக் கிடையை மறித்து யாரேனும் முறையிட்டால் ஊர் கூட்டம் கூட்டி பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்கிட வேண்டும் அதன் பின்னர் தான் ஆடுகள் மேய்ச்சலுக்குக் கிளம்ப முடியும். என்பது கிராமத்தில் இருக்கும் வழக்குமுறை. கிடை புதினத்தில் இது தான் கதையின் மைய நகர்வுக்குக் காரணமாகிறது. 'ஊருக்குள் ஒரு ஐந்து வயது குழந்தை வந்து 'கிடை மறித்து இருக்கிறதுசு என்று சொன்னாலும் போதும் கிடை மேய்ச்சலுக்குப் போகாது. ஒரு நாள் போகாவிட்டாலும் மிகுந்த நஷ்டம் ஏற்படும் கிடைக்கு. ஆகவே அதற்குள் தாங்கள் செய்த குற்றத்தைச் கீதாரி மூலமாக ஊருக்குள் தெரிவித்துக் கட்டுப்படுவார்கள். ஊரிலிருந்து என்ன பைசல் ஏற்படுத்துகிறார்களோ அதை உடனே கொடுத்து விடுவார்கள். பிறகு இரவில் கிடை போடும் இடத்தில் இவர்களுக்குள் விவகாரம் வைத்துக் கொள்வார்கள்சு என்று கிடைமறித்தல் நிகழ்வை கி.ரா. விவரிக்கின்றார். சைம்பெண்ணாகிய ராக்கம்மாவின் புஞ்சையில் பருத்தி எவ்வளவு அழிமானம் ஆகியுள்ளது என்பதை மதிப்பிட திம்மநாயக்கர் தலையில் மூவர் குழு புறப்படுகிறது. சில நேரங்களில் ஆடுகளை வயலில் விட்டது யார் என்பது கண்டு பிடிக்க முடியாத போது குறிகேட்பதற்காக வெளியூர் சென்று வருவதும் உண்டு. இப்புதினத்தில் யாருடைய ஆடு என்பதை துப்பறியும் குழுவிலுள்ள திம்ம நாயக்கர் கண்டு பிடித்திருந்தாலும் வெளியில் சொல்லாமல் நாளைக் கடத்துவதற்கு குறிகேட்க வெளியூர் செல்கிறார்.*

**ஆட்டுக்காரர்களும் சம்சாரிகளும்**

*உழவுத் தொழிலுக்கும் கால்நடை வளர்ப்புக்கும் நெருங்கிய உறவு தொடர்ந்து இருந்து வந்துள்ளது. ஆட்டுக்கிடை அமர்த்தி உரம் பெறும் அமைப்பு பற்றிய இலக்கியத்தரவுகள் பள்ளு இலக்கியங்களில் பெறப்படுகின்றன. இதன் மூலம் பழங்காலத்திலிருந்து கால்நடைகளின் கழிவுகளை உழவு நிலத்திற்கு ஏற்ற உரமாக உழவர்கள் பயன்படுத்தி வந்தமைக்கான சான்றுகள் கிடைக்கின்றன. ஆனாலும் வேளாண் நிலம் சொந்தமாக வைத்துள்ள*

*விவசாயிகளின் வயலில் ஆடுகள் புகுந்து அழித்து விட்டால் மேய்ப்பர்களுக்கும் உழவர்களுக்கும் உக்கிரமான சண்டை ஏற்பட்டு விடுகிறது. கிடைநாவலில் கி.ரா.*

*'ஊர்க்கூட்டத்தில் பருத்திக்காய் அழிவைப் பற்றி பல மாதிரியான பேச்சுக்கள் அடிபட்டன. ஆடு மேய்க்கிறவர்களைப் பற்றி இரண்டு வித அபிப்பிராயங்கள். பொதுவாக சம்சாரிகளுக்கு ஆட்டுக்காரர்கள் விரோதிகளே. அவர்கள் மேல் இவர்களுக்கு அடங்காத சினம். ஆட்டுக்காரர்களே தங்களைப் பற்றி 'நித்தக்குற்றவாளிகள்' என்று தாங்களைச் சொல்லிக் கொள்வார்கள். ஆட்டின் வயிறு தான் பெரிசே ஒழிய சம்சாரியின் மாசூலைப் பற்றி அவர்களுக்கு ஒரு போதும் கவலையில்லை '*

*என்று மேய்ச்சல் நிலமில்லாத ஆட்டுக்காரர்களைப் பற்றிய சித்திரத்தைத் தருகிறார்.*

**ஆச்சிக்குட்டியும் தருமப்பாலும்**

*ஆடு வாங்கி வளர்ப்பதற்கு வச தியற்றவர்கள் கீதாரியிடம் பேசி இலவசமாக ஆட்டுக்குட்டி வாங்குவதற்கு ஒரு புறமாக ஒதுங்கிக் காத்திருந்தனர். இதனை ''ஆச்சி க்குட்டி, ''வாங்குதல் என்று கி.ரா. குறிப்பிடுகின்றார். அவ்வாறு ஆச்சிக்குட்டி தானமாக வாங்குபவர்களை கிடைப்பிச்சை காரர்கள் என்ற சொல்லாலும் சுட்டுகின்றார்.*

*''ஆச்சிக்குட்டி ஆட்டுக்கிடையிலிருந்து தானமாக வழங்கப்படும்*

*ஆட்டுக் குட்டி. ஆச்சியாடு இலவசமாகக கிடைக்கும் ஆடுசு என்று நாஞ்சில் வட்டார வழக்குச் சொல்லகராதி குறிப்பிடுகின்றது..*

*வீடுகளில் குழந்தைகளுக்குப் பால் இல்லாத பெற்றவர்கள் கிடைக்கு வந்து இலவசமாக ஆட்டுப்பால் பீய்ச்சி வாங்கிச் சென்றனர். இதனைத் ''தருமப்பால் 'என்று கி.ரா. கூறுகின்றார்.*

*வயிற்றுக்கோளாறு உள்ள குழந்தைகளுக்கு வெள்ளாடுகளின் வயிற்றினுள்ளிலிருந்து அசை போடும் உதவியை எடுத்துக் கறந்தபாலுடன் உடனே கலந்து சங்கால் குழந்தைக்குப் புகட்டுவர்.*

*கண்வலிக்காரர்கள் ஆட்டுக்காரர்களின் ஒத்தாசையுடன் வெள்ளாட்டின் பாலை காம்பைப் பிடித்துத் தங்களின் நோயுடைய கண்களில் பீய்ச்சிக் கொண்டிருந்தார்கள்.*

*பெரியவர்கள் ஊர்க்கூட்டம் போடும் முன்னர் ஆட்டின் உப்புக் கண்டத்தைத் தின்று வெற்றிலை இடுகிறார்கள்.*

**ஆட்டுப் பெயர்கள்**

*கிடை புதினத்தில் ஏராளமான ஆட்டுப் பெயர்களைக் குறிப்பிடுகின்றார் கி.ரா.*

*குருட்டாடு - ஒற்றைக் கண் தெரியாதது.*

*சொட்டைக் காது சிறிய சுருங்கிய காதுகளை உடையது.*

*துடை மறை.*

*ஓங்கோல் - நீண்ட தொங்கட்டான் காதுகள்.*

*புளியம்போர் - புளியம் பூவைப் போல நிறம்.*

*கூளி வளர்ச்சி குன்றிய குட்டை*

*கணுவி - உடம்பு சிகப்பு: அடிவயிறு மட்டும் கருப்பு.*

*ராயாடு போர். உடம்பு சிகப்பு: அடிவயிற்றுக் கருப்பில் வெள்ளைப்*

*சென்றாயாடு சிகப்பு உடம்பில் அடிவயிற்றுக் கருப்பில் செம்போர்.*

*கரிசையாடு கருப்பு மிஞ்சின சிகப்பு.*

*கரிசைப்போர்.*

*கண்ணாடிப் போர் - கருப்பு மிஞ்சின சிகப்பில் வெள்ளைப் போர்.*

*கம்பளியாடு கருப்பு மிஞ்சின சிகப்பில், துடைகளிலும் முன் சப்பையிலும், முதுகு எலும்பு, புருவங்களிலும் தாரை தாரையாக கருப்புக் கோடுகள்.*

*சுட்டி - தலையில் வெண் புள்ளி.*

*வெண்தலை.*

*கொப்பாடு கொம்பு இருக்கும் பெண் ஆடு.*

*கிடா கொம்புள்ளது; ஆண். மோளைக்கிடா கொம்பில்லாதது. கொச்சைக்கிடா - விதையில்லாதது; பிறவியிலேயே.*

*இந்தக் கொச்சைக்கிடா கிடைப்பது ஒரு பெரிய செல்வம் என்று கிடைக்காரர்கள் கருதுகிறார்கள். இது அபூர்வமாகவே வாய்க்கும் ஒருவருக்கு. இதை வைத்திருக்கும் கிட்ணக் கோனாருக்கு இதனால் இடையில் மதிப்பு*

*கோட்டை மறை உடம்பைச் சுற்றி ஒரு வேற்றுநிறவட்டம். பூவால் வாலின் முனையில் வெள்ளை. தாலி. பூலி - காதுக் கருப்பில் வெள்ளைப் புள்ளிகள், கன்னி கோடுகள். கால், கண்பட்டை, அடிவயிறு முதலியதில் வெள்ளைக் கோடுகள்*

*பால் கன்னி,செவலைக் கன்னி,தவிட்டுப் போர் - தனி ஒரு நிறத்தில் நாலு நாலு ரோமங்களாய் வெள்ளை,சாம்பல் போர்,மொட்டை,குடைக் கொம்பு,உச்சி க் கொம்பு,ஒத்தைக் கொம்பு. ,மாடக் கொம்பு,முஞ்சி வெள்ளை,நெத்திச் சுட்டி,செ வலைப் போர். ,மச்சை - தனி நிறத்தில் மச்சம்,குரா -இளம் வயது,சுணக்கி புள்ளிமான் மாதிரியான நிறம்,நரை ரோமம் - கருப்பும் வெள்ளையும் சுலவன்.*

**ஆவரம்பூவும் ஆட்டு மருத்துவமும்**

*ஆவாரம் பூவானது ஆடுகளுக்கு மட்டுமல்ல மனிதர்களுக்குப் பல்வேறு வகைகளில் பயன்படும் தாவரமாகும். இடைக்காடர் என்ற சித்தரின் வாழ்வியலைக் கூறும் போது அதன் பயன்களை வரிசைப்படுத்துகிறார் கி.ரா.*

*"பஞ்சம் வந்தால் ஆவாரஞ்செடி தவிர எல்லா புல் பூண்டும் எடுபட்டு போகுங்குறதை அவர் தெரியாதவரா? ஆவாரம் செடியிலே மேய்க்கிறது சமுத்திரத்துக்கு கொண்டு போய் தண்ணிக்கு விடறது ஆவாரம் செடியில் மேய்க்கிறது சமுத்திரத் தண்ணீர்ல கொண்டு போய் தண்ணிக்கு விடறது இப்படியே அவர் துன்பத்தில் நல்லா பழக்கப்படுத்திவிட்டார்*

*நிறைய்ய வரகை விதைச்சு வேண்டிய மட்டும் வரகு தயார் பண்ணினாரு. மண்ணையும் வரகையும் போட்டு குழைச்சுத் தண்ணி விட்டு மிதிச்சு பெரிய கோட்டை கட்டினாரு .12 வருஷம் அந்த கோட்டையிலே அவரும் அவரு ஆடுகளுமாகக்குடியிருந்தாரு. பஞ்சம் வந்தது மழை இல்லை .ஆவாரம் செ டிக்கு கொண்டாட்டம் புதரும் செடியுமா பூத்துக் குலுங்கிச்சி. எங்கன கண்டாலும் ஆவாரம் செடி ஆடுது.*

*ஆடுக ஆவாரஞ் செடிய மேயும் சமுத்திரத்தை தண்ணீர் குடிக்கும். கோட்டச்சுவரில் ஆடுக தெனவெடுத்து உடம்ப உரசும். அப்படி உரசரப்போ வரகு தரையிலே உதிரும் அத தூத்து எடுத்து அரிசியாக்கி ஆட்டிலெ ஆக்கி பாலைப் பீச்சி அந்தப் பாலில் அரிசியைப் போட்டு சுள்ளி பொறுக்கி வச்சி சிக்கிமுக்கியைத் தட்டி கங்கு உண்டு பண்ணி சமைச்சு சாப்பிட்டு 12 வருஷத்தையும் கழிச்சாரு இடைக்காடரு ' (கிடை)*

*என்று கூறுவதுடன் புதினம் எங்கும் பரவலாக ஆவாரம் பூவின் பண்புகளையும் பயன்களையும் பதிவாக்குகிறார்.*

1. *பூவைக் கசாயம் போட்டு குடிக்கிறோம்*
2. *மொட்டுக்களுக்குள் இருக்கிற அரிசியை அரைச்சு குழந்தைகளுக்கு மருந்தாக்கி கொடுக்கிறோம்*
3. *நஞ்சைக்கு தொளியிலே போட்டு மிதித்து உரமாக்குறோம்*
4. *குழையை குட்டிக்கு பால் கொடுக்காத ஆட்டில் அறையிலேயே சொருகி ஆட்ட வளைய வைக்கிறோம்*
5. *பட்டையை எடுத்து ஆட்டு தோலை பதப்படுத்துகிறோம் 6.கொழுந்தையும் காயையும் எண்ணெய் தேய்த்துக் குளிக்கிறப்போ அரைப்பாக உபயோகப்படுத்துகிறோம்*

*ஆவாரம் பூவை ஆடுகள் உண்ணுமா என்று நாம் வியக்கும் போது*

*"ஆடு திங்காத தழையே கிடையாது; அதுலயும் கும்பி காஞ்சா குதிரையும் வைக்கோல் திங்கும்" என்று கி.ரா. பதிலுரைக்கிறார்.*

*மழை வருவதைக் கணிப்பதற்கு ஆடுகள் மேய்ச்சலுக்குச் செல்லாமல் பட்டிக்குத் திரும்பி வந்து விடுவதை வைத்துக் கூறுகிறார். ஆடுகளுக்கு வரும் வெக்கை நோய் நீங்குவதற்கு திருச்செந்தூர் முருகனுக்கு நேர்ந்து கொண்டு கோயில் மண்ணை எடுத்துப் பூசும் நம்பிக்கையைக் காட்டுகிறார்.*

**சமூக உறவுகள்**

*கிடை புதினத்தில் வீடுகளைப் பற்றி வருணிக்கும் போதே ஏற்றத்தாழ்வின்வருக்க முரண்கள் புரியத் தொடங்கி விடுகின்றன. கிடை மேய்க்கும் தொழிலுக்குச் செல்லும் மேல் தட்டு சாதியான எல்லப்பனும் விளிம்பு நிலையில் உள்ள செவனியும் ஒருவரையொருவர் விரும்பினாலும் இணைய முடியாத குடிமரபுகள் அழுத்தமாக உரைக்கப்படுகின்றன எல்லப்பனும் செவனியும் பழகுகிறார்கள் என்பதை அறிந்தவுடனே அவனை வெளியூருக்கு அழைத்துச் சென்று இரண்டு பெண்களைத் திருமணம் செய்வித்து ஊர்வலம் வருகிறார்கள்.*

*இதே நேரத்தில் அங்கே பள்ளக்குடியில் செவனியை எருக்கம் விளாரினால் அடித்துக்கொண்டிருந்தார்கள். "யார் நீ சொல்லு! சொல்லு!" என்று கோடாங்கிக்காரன் அவளை அடித்துக்கொண்டே கேட்டான். அவளுடைய தலைமயிர் அவிழ்ந்து நீ ளமாகத் தொங்கித் தரையைத் தொட்டது. நெற்றி தலையிலெல்லாம் ஒரே விபூதி: அதில் கருப்பு மை. அவள் தன்னுடைய இரண்டு கைகளையும் தனக்கு முன்னால் தரையில் ஊன்றி, வீர மண்டியிட்டு அமர்ந்திருந்தாள். கண்கள் மூடியிருந்தன. அதிலிருந்து கண்ணீர் சொட்டிக்கொண்டிருந்தது. திரும்பவும் ஒரு பாய்ச்சல் அவளை எருக்கம் விளாரினால் அடித்து முடித்துவிட்டு, கோடாங்கி உடுக்கை எடுத்து, அதைத் தடவி விட்டுக்கொண்டு ஒலியை எழுப்பினான். அந்த உடுக்கின் சப்தம் கேட்பவரின் இதயத்தை என்னவோ செய்தது. அவன் பாடினான். அந்தப்பாட்டு கல்லும் கசியும்படியான சோகம் நிறைந்தது. தன்னுடைய கதையைச் சோகம் ததும்பச் சொல்ல, அது அடியெடுத்துக் கொடுப்பதுபோல் இருந்தது.செவனி அந்த உடுக்கின் அடிக்கேற்ப ஆடிக்கொண்டே 'தன்' கதையைப் பாட்டாக அங்கிருப்பவர்களுக்குச் சொல்லத்தொடங்கினாள் 'என்று கிடை புதினத்தை நிறைவு செய்கின்றார் கி.ரா. மிக இறுக்கமான கட்டுக்கோப்புள்ள மனிதமற்ற ஒரு நிலவியலை அப்போது நம்மால் உணர முடிகிறது*

*இந்த நூலை வாசிக்கும்போது உழைப்பு, உணர்வு, நீதி, அநீதி, சமூகப் போராட்டங்கள், வாழ்வியல் நடைமுறைகளை அழுத்தம் திருத்தமாகக் கோடிட்டுக் காட்டியது தெரிகிறது.*

*இன்றைய முல்லை நிலம் முல்லைப்பண்ணி இசையை மீட்ட மறந்துபோயிருக்கிறது. இயற்கைப் பேரழிவுகளும் இதற்கு துணை நிற்கின்றன. கொத்து கொத்தாக கிடையை இழந்து வாடுவது ஒருபுறம் இருந்தாலும் ஆடு மாடுகளின் நிலை இன்றைய சூழலில் மிகவும் இரங்கத்தக்கது.*

*நடுநாட்டு வட்டார வழக்குச் சொல்லகராதி*
*அ.க.பெருமாள்*
*தமிழினி*
*சென்னை*
*2010.*

*கிடை*
*கி.ராஜநாராயணன்*
*காலச்சுவடு*
*சென்னை*
*2010*